# தெஹியத்தகண்டி பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹியத்தகண்டி பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 44,128,797 கூட்டுத்தொகையான 04 சொத்து விடயங்கள் மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட 02 நிர்மாண வேலைகளுக்குரியதாக செலுத்த வேண்டிய ரூபா 1,672,165 தொகைக்காக ரூபா 2,000,000 தொகையான கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டில் கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட ரிதீ எல வீதி கொங்கிரீட் இடும் வேலைக்குரியதாக செலுத்த | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரிதீ எல வீதி கொங்கிரீட் இடுவதற்கான கடன்கொடுத்தோர் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய ரூபா 1,471,864 தொகைக்காக ரூபா 1,702,691 தொகையான கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | | ஏற்பாடு அதிகரித்து காண்பிக்கப்பட்டதுடன் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டிற்குரியதாக பெறவேண்டிய கடை வாடகை ரூபா 1,341,955 ரூபா 1,274,470 ஆக கணக்கு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | பெறவேண்டிய கடை வாடகை கணக்கீடு செய்யும் போது ஏற்பட்ட வழுக்களை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டிற்குரியதாக செலுத்த வேண்டிய ரூபா 96,212 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது செலுத்தவேண்டிய ரூபா 96,212 தொகை குறைவாக காட்டப்பட்டதுடன் அந்த வழுவைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (vi) | பயன்பாட்டு பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைத்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 84,555 தொகை ரூபா 61,080 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைத்த புத்தகங்களின் பெறுமதி 2018 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இனங்காணப்படாதிருந்தது டன் அந்த வழுவைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (vii) | மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணப் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பண பெறுமதி 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இனங்காண முடியாதிருந்ததுடன் இந்த |

| | | |
|---|---|---|
| | | வழுவைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சந்துன்புர கிராமோதய சபை மற்றும் நாமல்ஓய பிரதேச சபை என்பவற்றிக்கு முறையே ரூபா 25,000 மற்றும் 15,000 தொகையாக 1998 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1998 ஆம் ஆண்டு முதல் உள்ள தீர்க்கப்படாத முற்பண மீதிகளைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 24,228,156 தொகையான 04 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 6,183,288 தொகையான 02 பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் ஏடுகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது உரிய ஏடுகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.4 இணங்காமைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150(4) ஆம் பிரிவு | 57,350 | வியாபார வரி செலுத்தாமல் புறக்கணித்தவர்கள் தொடர்பாக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல்வேறு சந்தர்ப்பங்களின் போது இந்த அறவிடல்கள் அறிவிக்கப்பட்டது. சில வியாபாரங்கள் மூடப்பட்டிருந்தமையின் காரணமாக மேற்கூறப்பட்ட பெறுமதியை அறவிடுவதற்குரிய தரப்பினரை இனங்காண முடியாதிருந்தது. வருமான பரீட்சகரிடம் இது தொடர்பாக முறையாக அறிக்கையொன்றைப் பெற்று பிரதேச சபை நிறைவேற்றுக் கூட்டத்தின் போது தீர்மானம் எடுத்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 21 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | உரிய வாகனங்களுக்கு எரிபொருள் பரிட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 1,698,000 | சபைக்கு சொந்தமான 17 கணனிகள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி துணைப்பாகங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்படடிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | சபைக்குச் சொந்தமான ரூபா 1,698,000 பெறுமதியான கணனிகள் பொருட்பதிவேட்டு புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இதற்காக தனிப்பட்ட பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,071,890 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,587,392 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,488,956 | 1,728,772 | 1,466,069 | 2,555,273 | 1,543,956 | 1,596,266 | 1,115,942 | 2,264,129 |
| (ii) | வாடகை | 10,343,566 | 9,616,676 | 8,970,726 | 1,087,200 | 8,117,866 | 8,829,540 | 8,350,860 | 521,085 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,510,600 | 1,875,050 | 1,833,700 | 57,350 | 1,441,000 | 1,804,110 | 1,815,310 | 20,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,864,000 | 269,335 | 3,604,485 | 187,270 | 1,833,000 | 2,306,395 | 2,198,187 | 188,500 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் இனங்காணப்பட்டு அறவிடப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் தெஹியத்தகண்டிய நீதவான் நீதிமன்றத்திலிருந்து செலுத்துவதற்குள்ள பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |

(ஆ) **முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரு கிடைக்க வேண்டிய முத்தரைக் கட்டணம் ரூபா 53,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முத்திரைக் கட்டணத்தை அறவிட வேண்டும். | உரிய வரித் தொகை கோரப்பட்டிருந்த போதிலும் இந்த முத்திரைக் கட்டணம் எங்கள் அலுவலகத்திற்கு இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு |

தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 01 விடயததிற்காக மாத்திரமே உபவிதி விதிக்கப்பட்டிருந்தது. | உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் 15 இன் பிரகாரம் விதிக்கப்பட வேண்டிய உப விதிகள் சபையின் மூலம் தயாரிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இந்த உப விதி அங்கீகரிக்கப்பட்டு இருக்கவில்லை. அதன் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான உப விதி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டதுடன் அது எமது நிறுவனத்தில் அமுல்படுத்தப்படுகின்றது. அவ்வாறு இதுவரையிலும் கிழக்கு மாகாண சபையினால் 05 உப விதிகளை அமுல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை அறியத்தருகின்றோம். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டிற்காகவும் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த வருடத்தில் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படாத போதிலும் எதிர்வரும் ஆண்டிற்காக தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

(இ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் லிஹிணியாகம கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்துக்காக பிளாஸ்திக் தூளாக்கும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,000,000 தொகையான நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 390,462 தொகை செலவிடப்பட்ட போதும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எதிர்பார்த்த விளைவுகள் பெறப்படாது கைவிடப்பட்டிருந்தது. | பிளாஸ்டிக் தூளாக்கும் இயந்திரத்தை வழங்கி பொருத்துவதற்கான செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | பிளாஸ்டிக் தூளாக்கும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரப்பட்ட உரிய வழங்குனரால் ரூபா 600,000 பெறுமதியான அந்த இயந்திரம் எமது நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட போதும் அதில் தொழிநுட்ப கோளாறுகள் சிலவற்றின் காரணமாக நிராகரிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. எனின் இந்த வழங்குனருக்கு அந்த இயந்திரத்துக்காக எந்த கொடுப்பனவும் செய்யப்படாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட பணம் பிரதேச சபை வேலைக் கணக்கில் உள்ளமை அறிக்கையிடப்பட்டதுடன் அது இலத்திரனியல் இறுவெட்டுக்கள் மற்றும் மின்இணைப்பு தொடர்பாக மிகுதி பணம் செலவிடப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்தை மீண்டும் சரியாக கையளித்ததன் பின்னர் அந்த பணம் செலுத்துவதற்கும் |

| | | |
|---|---|---|
| | | வழங்குனருக்கு அதற்காக இணங்குமாறும் அறிவிக்கப்படும். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக அறிந்திருந்த பொதும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக தெளிவுபடுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குச் சொந்தமான ஓட்டநிலையில் காணப்படுகின்ற 13 வாகனங்களுக்காக மீளாய்வாண்டுக்கான வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வருமான அனுமதிப்பத்திம் பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரையிலும் உரிய சகல வாகனங்களுக்காகவும் வருமான அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தெஹியத்தகண்டிய பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு உள்ள வாகனம் (UNOP) இற்காக உரிய கையளித்தல் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் வருமான அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு முடியும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினரில் 08 பதவிகளில் 11 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இந்த ஆட்சேர்ப்புக்கள் கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ளது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் 10 தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அதற்காக மீளாய்வாண்டில் அறவிடவேண்டிய ரூபா 30,000 தொகையான வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த நிறுவனங்களில் இது வரையிலும் உரிய வியாபார வரியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | பிரதேச சபையினால் இறுதியாக ஆதன வரி மதிப்பீடு செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டின் ஆதன வரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய ஆதன வரி மதிப்பீட்டை மேற்கொண்டு ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | கிழக்கு மாகாணத்தில் மதிப்பீட்டு திணைக்கள அலுவலகம் மட்டக்களப்பு நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அந்த அலுவலகம் 1 மாத்திரம் காணப்பட்டமை எங்களுக்கு வருடாந்த மதிப்பீட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் தாமதம் அடைந்தற்கு காரணமாக இருந்தது. இது தொடர்பாக அவ்வப்போது விசாரணை செய்யப்பட்ட போதிலும் இந்த தாமதம் தொடர்ந்தும் ஏற்பட்டு இருந்தது. 2020 ஆம் ஆண்டு முதல் இந்த ஆதன வரி மதிப்பீட்டைச் செய்வதற்கு மீண்டும் கோரி அனுப்பப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் சபைக்குச் சொந்தமான 05 கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் போதும் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டை மேற்கொண்டு கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | 2008 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுப் பெறுமதியில் 05 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கடைகள் நீண்டகால வாடகையின் கீழ் வழங்கப்பட்டு துரிதமாக இந்த மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்கள் ஏடுகளுக்குக் கொண்டுவரப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 1,990,190 பெறுமதியான 02 கட்டிடங்கள் நிலையான சொத்துப்பதிவேட்டில் உள்ளடக்கபபடவில்லை. | உரிய சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட அந்த சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |

**3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மகாவலி அதிகாரசபை, அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் நிதி அமைச்சின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 06 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து சபையின் பெயரில் கையேற்கப்பட வேண்டும். | இந்த வாகனங்கள் தற்போது செயற்பாடற்ற நிலையில் பழுதுபார்ப்பதற்கு முடியாது காணப்படுவதுடன் அந்த வாகனங்களின் உரித்தின் பிரகாரம் வழங்கப்பட்ட நிறுவனத்துக்கே கையளிக்குமாறு அறிவித்து அனுப்பபட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய கையளித்தல் நடவடிக்கைகள் எமது நிறுவனத்துக்கும் அந்த |

| | | | |
|---|---|---|---|
| | | | நிறுவனத்தால் மேற்கொள்ளமுடியாதாயின் அந்த வாகனங்களின் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இந்தப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ஏனைய வாகனங்கள் UNOP நிறுவனத்தின் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்ததுடன். அதன் பிரதான அலுவலகமும் காணப்படாமையின் காரணமாக இந்த வாகனங்களின் கையளித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்துடன் இதற்காக கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு உரிய ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | இலங்கை மகாவலி அதிகார சபையினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 1.72 ஹெக்டயர் அளவான 04 காணிக் கூறுகள் மற்றும் நில அளவு மற்றும் கணிப்பிட முடியாத 07 விளையாட்டு மைதானங்கள் என்பவற்றின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆதனங்களின் சட்ட ரீதியான உரித்தை சபையின் பெயருக்கு கையேற்கப்பட வேண்டும். | உங்களால் காண்பிக்கப்பட்ட 1.47 ஹெக்டயர் அளவான நிலம் தற்போது இலங்கை மகாவலி அதிகார சபையினால் முறையாக எங்கள் நிறுவனத்துக்கு பிரதான கையளித்தல் பத்திரத்தின் மூலம் கையளிக்கப்பட்டுள்ளது. 07 விளையாட்டு மைதானங்களின் நில அளவிற்காக அளத்தல் கட்டளை மகாவலி அதிகார சபைக்கு அறிவித்து அனுப்பப்பட்டதுடன் அந்த கட்டளை கிடைத்தவுடன் அளவை நடவடிக்கை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்படும். |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2006 மார்ச் 24 ஆம் திகதி வழங்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | ஓவ்வொரு ஆண்டிற்காகவும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பெறுகைத் திட்டம் எதிர்வரும் ஆண்டுக்காக தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது . |